1979 பிப்ரவரி 26]

திரு. என். சங்கரய்யா : 'பாயின்ட் ஆப் ஆர்டர்' சார். 'ஸீரோ அவரில்' உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமக்கு 'ஸீரோ அவர்' கிடையாது. எனவே, அதைச் சொல்லாதீர்கள்.

1. தகவல் கோரல்.—தொடர்ச்சி.

(ஆ) சிம்கோ மீட்டர் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் குறித்து.

திரு. என். சங்கரய்யா : 23ஆம் தேதியன்று இந்தச் சட்ட சபையிலேயே திருச்சி சிம்கோ மீட்டர் சம்பந்தமாக ஒரு அவசரமான நிலைமை இருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் வரிசையிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டு, அது மிக அவசரமானது என்று ஏற்றுக்கொண்டுதான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 12 மணி அளவிலே எதிர்க்கட்சித் தலைவர்களோடு தொழிலாளர் நல அமைச்சர் பேச ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லி, ஏற்பாடு செய்து பேசினார்கள். அதன் பிறகு இங்கே ஒரு அறிவிப்பையும் செய்தார்கள். அதன்படி இன்றைக்கு 25, 26 தேதியாகியும் அது சம்பந்தமாக என்ன முடிவு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட வில்லை. அங்கே கம்பெனி நிர்வாகிகள் காலம்கடத்தும் நிலைக்குக் கொண்டு செல்வதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. ஆகவே, அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்றுதான் சபையின் எண்ணம். அந்த நோக்கங்கள் நிறைவேறக்கூடிய அளவிற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் இன்றைக்கு அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 24ஆம் தேதி காலை திரு. உமாநாத் அவர்கள் மற்றவர்கள் சார்பாக நான்கு குறைகளைக் கொடுத்தார்கள். அதையொட்டிப் பேச்சுவார்த்தை நடந்தது. மன்னிக்கவும், அவர்கள் கொடுத்தது 23ஆம் தேதி. 24ஆம் தேதி 11 மணியிலிருந்து 2—10 மணி வரையில் முதலாளிகளை அழைத்துப் பேசினேன். அப்பொழுதுகூட உமாநாத் அவர்கள் என்னை நேரில் சேம்பரில் கண்டு, இந்தக் கோரிக்கை வெற்றி பெற 'பிரஷரைஸ்' செய்து முயற்சி செய்யுங்கள் என்று சொல்லிச்சென்றார்கள். அதையும் நான் முயற்சி செய்து பார்த்து கொண்டு இருந்தேன். 2—10 மணிக்குப் பிறகு மாலை 4 மணிக்கு கூடிப் பேசினோம். 4 மணி முதல் 5—30 மணி வரையில் என் இல்லத்திலே மீண்டும் பேச்சுவார்த்தை நடந்தது. நேற்று காலை 9 மணி முதல் 11

மணி வரையில் மீண்டும் பேச்சு வார்த்தை நடந்தது. நான் இந்தக் கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று வலியுறுத்தினேன். ஐ.என்.டி.யூ.சி. தலைவர்களில் ஒருவரான திரு. பழனியாண்டி அவர்களை அழைத்து ஒத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இன்று மாலை 3 மணிக்கு மீண்டும் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

(இ) டன்லப் தொழிற்சாலையில் கலவரம் குறித்து.

திரு. ர. ஜெபமணி: சபாநாயகரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். 22-ம தேதி இரவு டன்லப் தொழிற்சாலையில் பயங்கரமான ஒரு பெரிய கலவரம் நடந்து, இரண்டு தொழிலாளர்கள் பயங்கரமாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்கள். அதிலிருந்து டன்லப் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது. இது தொழிலாளர் பிரச்சினை மட்டுமல்ல, தொழிலாளர்களின் மனைவிமார்கள், எப்பொழுது புருஷன் வருவான், எப்பொழுது புருஷன் வருவான் என்று கேட்கும் அளவிற்குத் தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். பத்திரிகையிலும் இந்தச் செய்திகள் வரவில்லை. அரசுக்கும் இது தெரியவில்லை. இதைப்பற்றி நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். தாங்கள் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்தது என்னுடைய கவனத்தில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டு, அதற்கு தயாராக இருக்கும் நேரத்தில் எடுத்துக் கொள்கிறேன.

[முற்பகல் 10–20]

(ஈ) உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்களின் உறையும் தமிழில் அச்சடிக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நான் இரண்டு நாளைக்கு முன்னால் இந்த அவையிலே தமிழிலேதான் எல்லாம் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினேன். நீங்களும் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்தீர்கள். வினாக்கள் பட்டியல் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சிதான். இருந்தாலும் அந்தப் பார்வையிலே மாறுதல் கிடையாது. அந்தப் பார்வையிலே மாறுதல் இல்லாதவரை, தமிழை நாம் ஆட்சி மொழியாகக் கொண்டு வருகிறோம் என்பதில் பொருள் இல்லை. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கூடு ஆங்கிலத்திலே கொடுக்